# ஓமந்தையில் மரக்கண்ணிவெடி!

## 3 ராணுவ சிப்பாய்கள் பலி

தமிழ்ப் போராளிகளினல் முதற்தடவையாக பரீட்சித்துப் பார்க்கப்பட்ட மரக் கண்ணிவெடியில் சிக்கிய மூன்று ராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்ட சம்பவம் நேற்று ஓமந்தைப் பகுதியில் நடைபெற்றது. இங்குள்ள தென்னந்தோட்டமொன்றுக்கு ராணுவச் சிப்பாய்கள் நேற்றுக்காலை பத்துமணியளவில் சென்றபோது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. வழமையாக இந்தத் தோட்டத்துக்கு சிப்பாய்கள் சென்று இளநீர் பிடுங்குவது வழக்கமென்றும், நேற்றும் அவ்வாறு சென்ற சமயம் மரத்தில் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் இவர்கள் சிக்கி மரணமானதாகவும் தெரியவந்துள்ளது. இச் சம்பவத்தில் மேலும் மூன்று சிப்பாய்கள் பலத்த காயத்துக்குள்ளாகினர். இத் தாக்குதல் நடவடிக்கையால் நேற்றுப் பிற்பகல் வரை வவுனியா, யாழ்ப் [12ஆம் பக்கம் பார்க்க]

விலை ரூபா ஒன்று

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

முரசு 1; ஒலி 1 வெள்ளி 28 - 11 - 86 (கார்த்திகை 12) ர. அவ் 25

# சிதம்பரம் குழுவினர் மீண்டும் அடுத்த கிழமை வருகின்றனர்

## போராளிகள் தலைவர்களைச் சந்திக்க நாளை சென்னைக்குச் செல்கின்றனர்

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக ஜனதிபதி ஜெயவர்த்தனவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அமைச்சர் சிதம்பரம் தலைமையிலான குழு மீண்டும் அடுத்த வாரம் இலங்கை வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னேடியாக அமைச்சர் குழு நாளை சனிக்கிழமை சென்னைக்குச் செல்கின்றது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு வந்து திரும்பிய இக்குழு, இவ்வார இறுதியில் சென்னையில் தமிழீழப் போராளிகளுடன் பேச்சு நடத்துமென்றும், இவர்களிடம் இலங்கை அரசின் இறுதி நிலைப்பாடு தெரிவிக்கப்படுமென்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனுடனும் இக் குழுவினர் முக்கிய பேச்சுக்களை நடாத்தவுள்ளனர்.

வடமாகாணத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தையும் இணைத்த தமிழர் மாநில அமைப்பொன்றை அமைக்க இலங்கை அரசு முற்றுக மறுப்புத் தெரிவித்துள்ளதால், அடுத்து எடுக்கவிருக்கும் ஆலோசனைகளை இந்தியக் குழுவினர் அடுத்த வார இலங்கை விஜயத்தின்போது ஆராய்வரெனவும் தெரிவிக்கப்பட்டது.

கடற்படை கைது செய்த

## 99 தமிழ் அகதிகள் புத்தளம் பாடசாலையில்!

(அலுவலக நிருபர் எட்வர்ட் லியோன்)

கடந்த மாதம் மன்னரில் இருந்து இந்தியாவுக்கு படகில் செல்லும்போது கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தொண்ணூற்றி யொன்பது அகதிகளும் தற்போது புத்தளம் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் இவர்களை கடலில் கைது செய்யும்போது தப்பியோட முயன்ற நபர் ஒருவரும் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக் —12 ஆம் பக்கம் பார்க்க

## புதிய ஆலோசனைகளுடன் பெர்னட் டில்லி பயணம்

[கொழும்பு]

இலங்கையின் இந்தியத் தூதுவரான திரு. பெர்னட் திலகரத்தின நேற்று புதுடில்லி திரும்பினர்.

இந்திய அரசுக்கு இலங்கை சமர்ப்பித்துள்ள புதிய ஆலோசனைகளுடன் திரு. திலகரத்தின புதுடில்லி சென்றுள்ளதாகவும், பிரதமர் ராஜீவ் காந்தியிடம் இவர் இதனைக் கையளிப்பாரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தை வடமாகாணத்துடன் இணைப்பதை இலங்கை அரசு முற்றுக நிராகரித்துள்ளமை தூதுவர் மூலம் மீண்டும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் பிடிபட்ட

## சிப்பாய்களைப் பார்க்க வர பெற்றேருக்கு அரசு அனுமதி மறுப்பு

(நமது நிருபர் ரி.எஸ். ராஜேந்திரா)

மன்னர் அடம்பனில் சென்ற மாதம் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகளால் சிறை பிடிக்கப்பட்ட இரண்டு இராணுவச் சிப்பாய்களையும் யாழ்ப்பாணம் வந்து பார்வையிட அவர்களின் பெற்றேர் அனுமதி கோரிய பொழுது அவ்வாறு வழங்க முடியாதென பாதுகாப்பு அமைச்சு மறுத்துவிட்டது.

எனினும், தனியார் பஸ் மூலமாக அடுத்தவார நடுப்பகுதியளவில் இரு சிப்பாய்களினதும் பெற்றேர்களும் யாழ்ப்பாணம் வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை கைப்பற்றப்பட்ட சிப்பாய்களை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்கக் கோரி ஒரு இலட்சம் பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று ஜனதிபதி ஜெயவர்த்தனவுக்கு ஸ்ரீ லங்கா மக்கள் கட்சித் தலைவர் திரு. விஜய குமாரணதுங்காவினல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப் பிரச்சினை தொடர்பாக மீண்டும் யாழ்ப்பாணம் வருவதற்கு தமது கட்சி ஜனதிபதியிடம் அனுமதி கோரியுள்ளதாகவும் அனுமதி கிடைத்ததும் தாம் யாழ்ப்பாணம் வந்து சிப்பாய்களின் விடுதலைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் திரு. குமாரணதுங்க தெரிவித்தார்.

## நெடுந்தீவில் கைதானேரில் ஏழு பேர் மட்டும் விடுதலை!

[அலுவலக நிருபர் இ. பாரதி]

நெடுந்தீவுக் கடலில் வைத்து கடந்த வியாழக்கிழமை இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்ட முப்பது பேரில் ஏழுபேர் நேற்று முன்தினம் இரவு பலாலி இராணுவ முகாமில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர். வண்ணர் பண்ணை மேற்கு கிராமசேவகர் திரு. ஆரோக்கியநாதன் இவ் எழுவரையும் நேரில் சென்று அழைத்து வந்தார்.

கொட்டடியைச் சேர்ந்த அரியமுத்து ஜெயராமன் (34) அவரது மனைவியான திருமதி வசந்தி (22), அவர்களது பிள்ளைகளான தீபா (3), தட்சொரூபா அல்லது கௌரி (ஒன்றரை வயது), கரவெட் —12 ஆம் பக்கம் பார்க்க

## தீ மூட்டி எரிப்பு!

வவுனியா மன்னர் வீதியிலுள்ள சிங்கள உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இனம்தெரியாதவர்களால் நேற்று முன்தினம் தீ வைத்து எரிக்கப்பட்டது.

## பாலைதீவு, இரணைதீவு கடலில் "கன் போட்" நடமாட்டம்

(குருநகர்)

குடாக்கடலுக்கு அப்பால் பாலைதீவு, இரணைதீவுக் கடல்களில் கடற்படை ரோந்துப் படகுகளினதும், 'கன்போட்'களதும்நடமாட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனல் கடற்றெழிலாளர்கள் ஆழ்கடல் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலைமை மீண்டும் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

—12 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் மீண்டும் இராணுவ வீதி ரோந்து!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முகாம் படையினர் கண்டிவீதி வழியாக டிப்போச்சந்திக்கும், கரடிப்போக்குச்சந்திக்குமே அடிக்கடி ரோந்து சென்று வருகின்றனர். இதனல் கரடிப்போக்குச்சந்திக்கருகிலுள்ள புனித திரேசாமகளிர்வித்தியாலயம், டிப்போச் சந்திக்கருகிலுள்ள மத்திய மகா வித்தியாலயம் ஆகிய இருபாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் மிகுந்த அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றனர். கடந்த சில தினங்களுக்குமுன்னர்டிப்போச்சந்தி வரை சென்றபடையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மத்தியமகாவித்தியாலய ஆசிரியர் ஒருவர் படுகாயத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.

## கச்சேரியடியில் 'ஹெலி' ரோந்து

யாழ். கச்சேரியடிப்பகுதியில் நேற்று மாலை ஹெலிக்காப்டர் ஒன்றும் கடல்விமானமும் தாழப்பறந்துவட்டமிட்டதால் அப்பகுதியில் பீதிஏற்பட்டது. காலையிலும் இதேபோல் கடல் விமானம் வட்டமிட்டதால் போராளிகள் தாக்குதலைச் சமாளிக்க தயாராகநின்றனர்.

## சித்திரச் சிறுவிளம்பரம்

### வாங்கவும் விற்கவும்

எப்பொருள்களானாலும், புதியனவைகளானாலும், பழையவைகளானாலும், வாங்கவும்/விற்கவும் தினமும் எம்மைநாடுங்கள். எங்களிடம் புதியனவும், பழையனவுமாகிய நானுவித பொருட்கள் மலிவு விற்பனைக்கிருக்கின்றன. லக்கிபெனிபிட் கொம்பனி லிமிட்டட், பொதுச்சந்தை (சந்திக்கருகாமையில்) கோப்பாய்.

### சோதிடம்

வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி? (1-1-87 தொடக்கம் ஒரு வருடப்பலன்) இடப, கடக, கன்னி, விருச்சிக, கும்ப ராசிக்காரகள் கொடுத்து வைத்தவர்கள். மேட, மிதுன சிங்க, துலா, தனு, மகர, கும்ப ராசிக்காரர்களுக்கு விடியலுக்கில்லை தூரம். சோதிடர் V. A. சிவராசா, B. A. B. Phil. வேலணை.

### புத்தகம்

திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி — அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் கலாநிதி திருமுருக கிருபானத்த வாரியார் சுவாமிகளின் முன்னுரையுடன் நல்லை ஆதீன முதலாவது குருமகா சந்நிதானம், தமிழகத்து ஓதுவார் மூர்த்திகள் பாடியதும். பேராசிரியர் இராதா கிருஷ்ணன் பேராசிரியர் சோ—சிங்காரவேலன் ஆகியோரின் விளக்கவுரையுடன் கூடிய ஒலிப்பதிவு நாடா 29. 11. 1986 சனிக்கிழமை நல்லூர் சிவன் ஆலய நடராஜப் பெருமான் பொன்னர் திருவடியில் வைத்து வெளியிடவுள்ளனர். தொடர்பு: அகில இலங்தைத் திருமுறை மன்றம், 31/12, சங்கிலியன் வீதி, நல்லூர்.

30/R0104

### தேவை

TYPIST CUM CLERK

ஆங்கில, தமிழ் தட்டெழுத்தில் நன்கு தேர்ச்சியுள்ள A/L விஞ்ஞானம் படித்தவர்கள் தமது சொந்தக் கையெழுத்தில் 5-12-1986 இற்கு முன் விண்ணப்பிக்கவும். திறமைக்குத் தகுந்த ஊதியம் வழங்கப்படும். Bond Institution, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

29/R0103

### சேவை

சகல விதமான தட்டச்சு, (தமிழ், ஆங்கில) ரோணியோ வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும். தட்டச்சு, ரோணியோ மெஷின்கள் திருத்திக் கொடுக்கப்படும். Teens Copy, 58A, ஸ்ரான்லி, வீதி, யாழ்ப்பாணம்.

29/R0103

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் வாசுதேவனின் ''என்னில் விழும் நான்'' கவிதைத் தொகுப்பின் வெளியீட்டு விழா எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை 30.11.86) மாலை மூன்று மணியளவில் நல்லூர் இந்து விடுதியில் மல்லிகைப் பந்தலின் ஆதரவில் நடைபெறும்.

கம்பன் கழகச் செயலாளர் திரு. ஜெயராஜின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கவிஞர் இ. சிவானந்தன் கவிஞர் சோ. பத்மநாதன், திரு. இரா. சிவச்சந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

## வலம்புரி கிடைத்தது

(காவலூர்)

வேலணை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சி. சிவலோகநாதன் என்பவருக்கு சுமார் முப்பதினுயிரம் ரூபா பெறுமதியான வலம்புரிச் சங்கு கிடைத்துள்ளது.

## நீரிழிவு நோய் கருத்தரங்கு

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகமும் கொல்லங்கலட்டி விழிப்புக்குழுவும் இணைந்து நடாத்தும் நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கு கொல்லங்கலட்டியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சைவமகாவித்தியாலத்தில் 2.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் என். சரவணபவானந்தன், பேராசிரிய எஸ். வி. பரமேஸ்வரன், டாக்டர் எஸ். நாகநாதர், டாக்டர் ஆர். எப். ஜேம்ஸ், டாக்டர். திருமதி ரீ. சரவணபவானந்தன், டாக்டர் எஸ். பொன்னம்பலம் ஆகியோர் இங்கு கருத்துரைவழங்குவார்கள்.


முரசொலிக்கு எமது வாழ்த்துக்கள்

அன்புடன் அழைக்கின்றது!

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை கம்பியூட்டர் முறையில் செய்து கொள்ள பிரதி ஒன்றுக்கு ரூபா; 5/- மட்டுமே.

எங்களால் நெகடிவ் (PROCESSING) இலவசமாகச் செய்து கொடுக்கப்படுகின்றது.

வர்ண நிழற்பட சுருள்கள் விற்பனைக்கு உண்டு.

KODAK - FUJI - SAKURA - KONICA - FORTE

பொய்மை என்றும் நிலைப்பதில்லை

3/0003



காலத்தின் செய்திகளை

கருத்தோடு தரவரும்

முரசொலிக்கு

எமது இனிய நல்வாழ்த்துக்கள்!

**லக்ஷ்மி ஸ்ரோர்ஸ்**

கொக்குவில் சந்தி

பலசரக்கு, பால்மா, உப உணவுப் பொருட்கள், மற்றும் நுகர்ச்சிப் பொருட்கள்

மொத்த, சில்லறை விற்பனை நிலையம்.

முரசொலி விற்பனையாளர் முகவர்

4/0004





முரசொலிக்கு எங்கள் முத்தான நல்வாழ்த்துக்கள்!

ஞானம் ஆர்ட்ஸ் அன் அட்வடைசிங்ஸ்

"ஸ்ரிக்கேர்ஸ்" தயாரிப்பாளர்கள்- ஸ்கிறீன் பிறின்ரேஸ்-ஆர்ட்ரிஸ்ற்ஸ்

"சித்திரபவன்," சங்கானை.

Gnanam Arts & Advertisings

STICKER MAKERS, SCREEN PRINTERS, ARTISTS & ADVERTISERS

"CHITHRA BHAVAN" CHANKANAI.



வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறன்

කියවීමෙන් මිනිසෙකු සම්පූර්ණ කෙරේ

READING MAKES A MAN PERFECT

By Courtesy: MILK WHITE SOAP WORKS, Jaffna (Ceylon)

முரசொலிக்கு

எமது நல்வாழ்த்துக்கள்!

உள்நாட்டு மூலப் பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு ஆதரவு கொடுப்போம்.

★ மில்க்வைற், யாழ்ப்பாணம்.

1/C0001



With the best wishes from: **VINK TUITION CENTRE**

Nachchimarkoviladi, Jaffna.

13/C0013

நல்வாக்கு

அகரமுதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு.

—திருக்குறள்

ஆர். ஜீ. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 25007, 25008.

# இதயநாதம்

## எங்கள் பாதை

அன்புக்கினிய வாசகர்களே!

கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி, பல்கோடி வணக்கங்களைத் தெரிவித்து, முரசொலி பத்திரிகையின் முதல் இதழைத் தங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

தமிழ் மக்கள் மிகவும் நெருக்கடியான காலகட்டமொன்றில் ஜீவமரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில் முரசொலி வெளிவரத் தொடங்குகின்றது.

தமிழ் மக்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே சுதந்திரமாக வாழமுடியாத காலமிது. ஈழத் திருநாட்டின் சுதந்திரத்துக்காக முப்பதாண்டுகளுக்கு முன்னர் அந்நியர்களுடன் போராடி வெற்றி பெற்ற தமிழினம், இன்று தனது சொந்த நாட்டில் தனது பிறப்புரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கல்விச் சுதந்திரம், தொழில் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் ஆகியவைகள் மட்டுமன்றி, தங்கள் மண்ணில், தங்கள் சொந்த வீட்டில் நிம்மதியாகப் படுத்துறங்கும் சுதந்திரம் கூட இன்று தமிழர்களுக்குக் கிடையாது.

இந்நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களாலும் படிப்படியாக தமிழரின் சகல உரிமைகளும் பறிக்கப்பட்டு வந்ததை வரலாறு உணர்த்தும்.

இதன் பயனாகவே மண்காக்கும் புனிதப் பணியில் தமிழ் இளைஞர்கள் தமது உயிரைப் பணயம் வைத்துப் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தமிழ் மண்காக்கும் போராட்டத்தில் உயிரைத் தியாகஞ் செய்த ஒவ்வொருவரையும் நெஞ்சில் நிறுத்தி, அவர்களுக்கு வீர அஞ்சலியைச் செலுத்தி முரசொலி தனது முதலாவது இதழை இன்று விரிக்கின்றது.

"குடும்பத்துக்கு ஒரு வீடு வேண்டும்; இனத்துக்கு ஒரு நாடு வேண்டும்" என்பதை எவரும் மறுக்க முடியாது.

மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் எந்தவொரு இனமும் சுதந்திரமாக வாழ முடியாது என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

ஈழம் வாழ் தமிழினம் தனது அடிப்படைச் சுதந்திரத்துக்காகவே இன்று போராடி வருகின்றது.

ஒரு இனத்தை அழிப்பதையோ, ஒரு மதத்தை ஒழிப்பதையோ, ஒரு மொழியைச் சிதைப்பதையோ தமிழ் மக்கள் விரும்பவில்லை.

இந்நாட்டின் பெரும்பான்மை இன மக்களுக்குள்ள அடிப்படை மனித உரிமைகள் தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதுவே போராட்டத்தின் அடிநாதமாகும்.

பலகோடி ரூபா பெறுமதியான அழிப்புக்களையும், மதிப்பிடற்கரிய ஆயிரக்கணக்கான உயிர் இழப்புக்களையும் தாங்கிக்கொண்டும் தமிழின பாதுகாப்புப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இவ்வாறான மிகமிக நெருக்கடியான காலத்தில், வாழ்வா சாவா என்று தமிழ் மக்கள் கத்திமேல் நடைபோட்டுக்கொண்டிருக்கும் வேளையில், தமிழ் மண்ணிலிருந்து புதிய தினசரியாக 'முரசொலி' இன்று வெளிவரத் தொடங்குகின்றது.

மண் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களைப் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டி படையினரின் ஆயுதங்கள் பலியெடுத்துவரும் இவ்வேளையில், உண்மை நிலையை மக்கள் முன் எடுத்துச்சென்று, இன விடுதலைக்காகப் போராடுபவர்களுடன் அனைத்துச் சக்திகளையும் இணைத்து வைக்கும் பாரிய பணியை முரசொலி செய்யப்போகின்றது.

உண்மை, நேர்மை, துணிச்சல் ஆகியவைகளையே தனது ஆயுதமாகக்கொண்டு, தமிழ்ப்பத்திரிகை உலகின் ஒரு விடிவெள்ளியாக 'முரசொலி' இன்று முதல் வெளிவருகின்றது.

தொடரப் போகும் போராட்டத்தில் சகலரையும் பங்காளிகளாக்கும் பாரிய பணியை தனது தலைமேற்கொண்டு 'முரசொலி' தமிழர் பிரதேசமெங்கணும் நாதம் எழுப்பும் என்று திடமாகக் கூற விரும்புகின்றோம்.

மலரப் போகும் சுதந்திர பூமியின் வெற்றிமுரசாக, தமிழ் பேசும் மக்களின் வீரமுரசாக, தமிழர் இல்லங்கள் தோறும் முரசொலி கேட்கும் என்பது நிச்சயம்.

எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்.

திரை மறைவில் நடந்தது என்ன ?

# பிரபாகரன் கைதாகி விடுதலையானது எவ்வாறு?

நவம்பர் 8-ம் திகதி சனிக்கிழமை —

சென்னை நகரில் விடுதலைப் புலிகள், முக்கியமாகப் பிரபாகரன் கைது செய்யப்பட்ட செய்தி கொழும்பு நகரத்தில் படுவேகத்தில் பரவியது! சிங்களவர்கள் தெருக்களில் கூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். பொதுவாக புது வருடம் அன்றுதான் அங்கே இரவெல்லாம் கொண்டாட்டமாக இருக்கும். சனிக்கிழமை இரவு புது வருடம் போல கொழும்பு நகரில் சிங்களவர்கள் குடித்துக் குதித்துக் கோலாகலமாக, போராளிகள் கைதான செய்தியைக் கொண்டாடினார்கள் — 'சியர்ஸ் டு ராஜீவ் காந்தி', 'சியர்ஸ் டு எம். ஜி. ஆர்.' என்ற கோஷங்கள் பல இடங்களில்!

விடுதலைப் புலிகள் மீது எடுத்த நடவடிக்கைபற்றி எப்படி 'ரியாக்ட்' செய்வது என்று புரியாமல் தமிழ்நாடு திணறிக் கொண்டிருந்தது. ஆனால் ஒரு விஷயம்... சூளைமேடு சம்பவத்துக்குப் பிறகு விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஒருசூழ்நிலையை உருவாக்கதிட்டமிட்ட முயற்சிகள் செய்யப்பட்டதென்னவோ உண்மை! சில பெரிய பொலிஸ் அதிகாரிகள், 'இவர்களை எல்லாம் ஒரே ரவுண்டில் பிடித்து உள்ளே தள்ளிவிடுவோம்' என்று நிருபர்களிடம் மார்தட்டியதும் உண்டு. சில பத்திரிகையாளர்களிடம் புலிகளுக்கு எதிரான மக்கள் கருத்து உருவாக்க வேண்டும் என்று இவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்! 'எதிரான கருத்து உருவாகிவிட்டது' என்ற பிரமையைத் தோற்றுவித்த பிறகே பொலிஸ் கைது நடவடிக்கையில் இறங்கியது!

கண்டனமே இல்லை!

ஆரம்பத்தில் பொலிஸ் நடவடிக்கையைக் கண்டிக்கவே ஆள் இல்லை. அமிர்தலிங்கத்தின் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் கூட்டம் அவசர அவசரமாகக்கூட்டப்பட்டது. மூன்று மணி நேரம் காரசாரமான விவாதம் நடந்தது. ''புலிகளைக் கைது செய்தது, காட்டிக் கொடுத்த செயல்... அவர்கள் இனி பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பார்களா? அவர்கள் இல்லாமல் நாம் இங்கே உட்கார்ந்து எதைச் சாதிக்க முடியும்?' என்று ஆத்திரப்பட்டவர்களை அடக்கினார் அமிர்தலிங்கம். ''இந்திய அரசுக்கு எதிராக மூச்சுவிடக் கூடாது... கப்சிப்'' என்று சொல்லிவிட்டார் அவர்! பொறுப்பான அமிர்தலிங்கம் கட்சியே தம்பிகளுக்குப் பரிந்து வரத் தயாராக இல்லை!

தமிழ் நாட்டில் தி. மு. க. இந்தி எதிர்ப்பில் சிக்கியிருக்கிறது. ஆகவே அங்கேயும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் ஈழப் போராளிகள் தனிமைப் படுத்தப்பட்டார்கள்.

இந்திய அரசு ஒரு சமரசத் திட்டத்தை ஏற்க விடுதலைப் புலிகளை வற்புறுத்தி வருகிறது. அந்தத் திட்டத்தில் உருப்படியாக எதுவும் இல்லை என்ற சோர்வு புலிகள் கோஷ்டிக்கு! சமீபத்தில் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் சென்னை வந்தபோது தன்னைச் சந்திக்கப் போராளிகளின் தலைவர்களை அழைத்தார். காலையில் இருந்து காத்திருந்தார் சிதம்பரம். இரவுதான் அவரைச் சந்திக்க தலைவர்கள் வந்தார்கள். 'இனிபேசுவதற்கு என்ன இருக்கிறது?' என்பதே அவர்கள் தயக்கத்துக்குக் காரணம்! பொறுமையிழந்த சிதம்பரம், அவர்களைப் பார்த்து ''உங்கள் மனதில் என்னதான் இருக்கிறது; இனிமேல் பேச எனக்கு நேரமில்லை ... காலை ஃப்ளைட்டில் டெல்லி போகிறேன்'' என்றுசொல்லி, திருப்பி அனுப்பி விட்டார். இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் தொடர்ந்து போராளிகளைப் பணிய வைக்க 'ஏதாவது செய்தாக வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது.

கைது ஆனபோது......

சூளைமேடு சம்பவத்தை ஒரு சாக்காக எடுத்துக் கொண்டு, போராளிகள் இருக்கும் இடத்

## செய்தியின் பின்னணியில்

தையெல்லாம் லிஸ்ட் எடுத்தது பொலிஸ். பிரபாகரன் தலைவராக உள்ள எல். ரி. ரி. ஈ. அமைப்பிடம் நேரில்வந்து முகவரிகளைப் பெற்றது பொலிஸ். தாராளமாகக் கொடுத்தார்கள்.

சனிக்கிழமை பொலிஸ் வீட்டில் நுழைந்தபோது, எல்லா ஆயுதங்களையும் பொலிஸிடம் ஒப்படைக்குமாறு பிரபாகரன் உத்தரவிட்டார்! முதலில் ஒரு சில ஆயுதங்களைத்தான் அவர்து போராளிகள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பிரபாகரனுக்கு எதிரிகள் அதிகம். பாதுகாப்புக்குத் தேவை ஆயிற்றே என்று அந்தப் போராளிகள் கவலைப்பட்ட... ''ஆயுதங்கள்தான் நம்மைப் பாதுகாக்கும் என்பது வீரர்கள் சொல்லக்கூடியவார்த்தை அல்ல'' என்று சொல்லி, ஆயுதங்களைத் திரட்டி பொலிஸில் ஒப்படைத்தார் பிரபாகரன். ''பிரபாகரனே தமிழக பொலிஸ் அதிகாரி போல செயல்பட்டார்'' என்றார் ஒரு போராளி வியப்புடன்!

எல்லா இயக்கத்தினரும் விடுதலைப் புலிகள் என்றே தமிழ் நாட்டில் அழைக்கப்படுகின்றார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் என்ற பெயருக்கு அசல் உரிமையாளர்கள் பிரபாகரன் இயக்கத்தினர்தான். கட்டுப்பாடான பிரபாகரன் இயக்கத்தினர் தமிழ் நாட்டில் இதுவரை ரகளைகள் எதுவும் செய்ததாகக் கேள்விப்பட்டதில்லை. ஆனால் தன் இயக்கத்துக்கும் சேர்த்தே கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கின்றது என்பதை உணர்ந்தவர்தான் பிரபாகரன். அண்ணாநகரில் உள்ள பிரபாகரனின் நண்பர் ஒருவர் சில நாட்கள் முன் அவரைப் பார்க்க வந்தபோது 'பஸ்ஸில் மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் தெரியுமா? சூளை மேட்டில் ரகளை பண்ணிய விடுதலைப் புலி பிரபாகரனை பொலிஸ் கைது செய்துவிட்டதாமே என்று பேசுகிறார்கள்...'' என்று கூறினார்.

''எங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தஞ்சம் புகுந்த இடத்தில் கண்ணியம் காப்பவர்கள்'' என்று பலமுறை பிரபாகரன் குறிப்பிட்டிருக்கின்றார். பிரபாகரனே அதற்கு எடுத்துக் காட்டாகத்திகழ்ந்தார். சில ஆண்டுகளுக்கு முன்புமுதன்முதலாக பாண்டி பஜாரில் நடந்த ஒரு கோஷ்டிமோதலில் 'விடுதலைப் புலி' என்பதெல்லாம் தெரியாமல் இவரை நகர பொலிஸ் கைது செய்தது. பொலிஸ் நிலையத்தில் பிரபாகரன் அடிக்கப்பட்டார். பிரபாகரன் இடுப்பில் 'லோட்' செய்யப்பட்ட பிஸ்டல் இருந்தது. லாக் அப்பில் அவரைத்தள்ளும் போது இடுப்பில் இருந்த பிஸ்டலை இவரே பொலிஸிடம் ஒப்படைத்தார். அதிகாரிகள் திகைத்தார்கள்.

வேறு அமைப்பைச் சேர்ந்த போராளிகள் சில சமயங்கள் தங்களது துப்பாக்கிகளை நகரில் சில பேரிடம் விற்றபோது அதைக் கண்டுபிடித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துக் கைப்பற்றச் செய்

—10ஆம் பக்கம் பார்க்க

## நின்றிடுவாய் என்றும் நிலைத்து!

எங்கள் துயர இருள் விலக என்றென்றும்
உங்கள் முரசம் ஒலிக்கட்டும்! - இங்குள்ள
வேற்றுமைகள் நீங்க விழிப்புணர்ச்சி உண்டாக
ஆற்றுவதே மேலாம் அறம்.

நீதி வழுவா நெறி நிற்பாய்! தீமைகளை
மோதி ஒழிப்பாய் முரசொலியே! - வேதமொன்று
சொல்வேன்: அஞ்சாமை, துணிவு - இவற்றைக்
கைக்கொண்டே

செல்வாய், பெறுவாய் சிறப்பு!

நடுவு நிலைநிற்றல்; நாட்டுக் குழைத்தல்
கொடுமைகளைச் சாடிக் குதறல் - அடிமைநிலை
நீங்கப் பணியாற்றல், நேர்மை கடைப்பிடித்தல்
ஈங்கிவைசெய்; ஓங்கும் இனம்!

தக்கதுசெய் வாய், நம் தமிழை வளர்த்திடுவாய்!
மக்கள் குரலாய் மலர்ந்திடுவாய்! - திக்கனைத்தும்
சென்று புகழ்பெறுவாய்! செய்தி பலஉரைப்பாய்!
நின்றிடுவாய் என்றும் நிலைத்து!

--- சோ.ப.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள

# ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை மாணவர்களின் அனுமதி அட்டைகள் நேரடியாக விநியோகம்

(அலுவலக நிருபர் கிறிஸ்ரி ரஞ்சன்)

டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை விநியோகிக்கும் வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலைகள் மூலம் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாழ். கல்வித்திணைக்களத்தினால் தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன. எதிர்வரும் புதன்கிழமைக்குப் பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் யாழ். கல்வித்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இப்பரீட்சை ஒழுங்குகள் சம்பந்தமாக பரீட்சை இணைப்பு அதிகாரிகள், மேற்பார்வையாளர்கள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் நாளை காலை யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சையை மிக அமைதியானவகையில் நடந்த அனைவரதும் ஆலோசனையையும் கல்விப்பணிப்பாளர் கோரியுள்ளார்.

## யாழ். குடாநாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்கு பூர்வாங்க ஏற்பாடுகள்

(கிறிஸ்ரி ரஞ்சன்)

யாழ். மாவட்டத்தில் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியொதுக்கீடு, மாவட்ட அபிவிருத்தி அரச நன்கொடை என்பவற்றின் கீழ் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களைத் தயாரிக்கும் பூர்வாங்க ஏற்பாடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் வேலைத் திட்டங்கள் தொடர்பாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த மாதம் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ள திணைக்கள அதிகாரிகள் மட்டத்திலான கூட்டத்தில்இறுதி வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்படும்.

யாழ். மாவட்டத்திற்கு இவ்விரு திட்டங்களுக்காகவும் மொத்தம் ஐந்துகோடி ரூபா நிதியொதுக்கப் படுகின்றது.

1986ஆம் ஆண்டுக்கென யாழ். மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட முழுத்தொகையும் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. இவற்றில் எழுபத்திஐந்து இலட்சத்துக்கும் அதிகமான தொகை வீதி திருத்த வேலைகளுக்கெனப் பயன்படுத்தப் பட்டது.

## ஆலய உற்சவம்

( கொடிகாமம் )

நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான மிருசுவில் புனித நிக்கிலார் ஆலய வருடாந்த உற்சவ நவ நாள் ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

டிசம்பர் ஐந்தாம் திகதி மாலை வேஸ்பர் ஆராதனைகளும் ஆறும் திகதி காலை திருநாள் பாடல் பூசை திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

அதிபர் கூறுகிறார்:

## டியூஷன் கல்வி முறையால் மாணவர் ஒழுக்கம் சிதைவு

(குருநகர்)

"இன்று நாட்டில் பெருகியுள்ள டியூஷன் கல்வி மாணவர் மத்தியில் கல்வியை மட்டுமன்றி ஒழுக்கத்தையும் சுய சிந்தனையையும் கொடுத்து வருகிறது."

இவ்வாறு குருநகர் சென். ஜேம்ஸ் வித்தியாலய அதிபர் திரு. அ. ஸ்ரனிஸ்லாஸ் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

சங்கைக்குரிய சகோதரி பாஸ்கல் அவர்களது செபத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டத்தில் அதிபர் தொடர்ந்து பேசுகையில்;

"தமது பிள்ளைகள் கருத்துடன் கல்வி கற்கிறார்களா என்பதை பெற்றோர் நன்கு அவதானித்து வரவேண்டும். நெருக்கடிகள் பல மிகுந்துள்ளகாலகட்டம்இது. பிள்ளைகள் தமது கல்வியைப்பெற்றுக் கொள்வதில் இருக்கக் கூடிய இடுக்கண்களைக் கருத்தில் கொண்டு பெற்றோரும் ஆசிரியர்களும் தமது கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும்" என்றார்.

சங்கைக்குரிய சகோதரி லில்லி யோசா பேசுகையில், "பிள்ளைகள் சுத்தமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அதற்கு பெற்றோர் அவர்களுக்கு வழி காட்டுவது அவசியமாகும். மக்கள் செறிந்து வாழ்கின்ற இடமாக குருநகர் பகுதி இருப்பதால் சுற்றாடலைச் சுகாதார நலம் பேணி வைத்திருக்க வேண்டும்" என்றார்.

அருட் செல்வி பாஸ்கல் செயலாளர் தமியான் சூரி, ஆசிரியர் திரு. எஸ். பெனடிக்ற் ஆகியோரும் உரையாற்றினர்.

## மஹா கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

கல்வயல் வேதவனப்பிள்ளையார் மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

## வங்கியின் வட்டி குறைப்பால் வருவாயில் பெரும் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

வங்கிகள் வாடிக்கையாளர்களின் வைப்புப் பணங்களுக்கான வட்டி வீதங்களைக் குறைத்துக் கொண்டுள்ளமையால் கிறிஸ்தவ ஆசிரியர் சேவா சங்க வருவாயிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மேற்படி சங்க தீர்மானத்தில் கவலைதெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டிக்குறைப்பால் சங்கத்தின் வருமானம் பாதிக்கப்படாது பார்த்துக் கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சகாய நிதியின் செலவினங்களைக் குறைக்கும் நடவடிக்கையாக வருடாந்தக் கூட்டத்துக்கு வருவோருக்கு வழங்கப்பட்டு வந்த மதிய போஜனம் நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொருளாளர் மதிப்பூதியம், செயற்குழு உறுப்பினர்களின் பிரயாணச் செலவுகள் ஆகியனவும் குறைக்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் பணமும் வங்கிகளிலிருந்து மாற்றப்பட்டு கூடிய வட்டிபெறக் கூடிய விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சிறப்பிதழ்

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் கையெழுத்துப் பத்திரிகையான "அறிவொளிக்கலை"யின் 104ஆவது மாத இதழ் கிரிக்கட் சிறப்பிதழாக வெளியிடப்பட்டுள்ளது. இதன் வெளியீட்டுவிழா நிலைய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.


முரசொலி சிறந்து விளங்க வாழ்த்துகிறோம்

WOODCRAFT

உரிமையாளர்

T. S. குமாரசாமி

15/1, தலையாளி லேன், யாழ்ப்பாணம்.

19/C0018



திக்கெட்டும் திசையெல்லாம் ஒலிக்கட்டும் முரசொலி என் வாழ்த்துகிறோம்

★

கொக்குவில் ற்றேட் சென்ரர்

குளப்பிட்டி சந்தி, கொக்குவில்.

★

கொக்குவிலிலும் ரீனி சுப்பர் மார்க்கெட்

★

அன்றாடதேவைகள் அனைத்தையும் ஒரே கூரையின்கீழ் தேர்ந்திடுவீர்!

2/C0002



"முரசொலி"யே புகழ் பெற்று வாழி!

முரசொலி முழங்கட்டும் மக்களின் விடிவுக்கே
அறிவொளி பரப்பட்டும் அகிலத்தின் உயர்ச்சிக்கே
தரமெழில் சிந்தட்டும் தமிழர்தம் வாழ்வுக்கே
கரவொலி கிளம்பட்டும் கண்ணியமாம் சேவைக்கே.

இதயத்தில் எழுந்துவரும்
உண்மையதன் ஒலியாக
உதயத்தைக் காட்டுகின்ற
உன்னதமாம் ஒளியாக
அகிலத்தை ஆக்கஞ்செய்
அறிவு இதழ் வழியாகப்
புதினத்தைத் தந்திங்கே
புகழ் பெற்று வாழ்ந்திடுக!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

நாளை! கொக்குவில் இந்துவில்!!

ஹேலிஸ் போட்டோ பிறின்ற் லிமிட் வழங்கும்

# "AGFA குதூகல இரவு"

(பண்டிகைக் காலப் போட்டிகளுடன் பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி)

கொக்குவில் இந்துக் கல்லூரி அரங்கில் 29.11.86 சனிக்கிழமை பி. ப. 1 மணிக்கு
மாணவர்களுக்கான "பொது அறிவுப் போட்டி"யுடன் ஆரம்பமாகிறது!

தொடர்வது கலை நிகழ்ச்சிகள்!

★ ஒரு கலைஞனும் மூன்று வாத்தியங்களும்

ரங்கன் பின்னணியில் -திரு ★ வரதன் ★ சிறீதர்

★ நாட்டியாஞ்சலி

'உரும்பிராய் நாட்டிய அக்கடமி' மாணவிகள்

பின்னணியில்: பொன். புஸ்பரத்தினம் ★ எஸ். மகேந்திரன் ★ எஸ். கோபிதாஸ்
★ எஸ். விஜயன் ★ திருமதி பத்மினி செல்வேந்திரக்குமார்

★ நகைச்சுவை

'பல்குரல் மன்னன்' ரி. யோகராசா

பின்னணியில்: கே. எஸ். பி.

★ கான சாகரம்

## நோத் ஸ்ரார் இசைக் குழுவினர்

முன்னணியில்: எஸ். ஜோய் பூரணச்சந்திரன் ★ எஸ். ஆனந்தராஜா ★ ரி. கிரிதரன்
பின்னணியில்: ஏ. எம். நௌஷாத் ★ ஜீ. கே. நந்தகுமார் ★ ஏ. திரு ★ ஏ. ஜெயராமன்
★ எஸ். சிவகுமாரன் ★ எஸ். ரி. பாஸ்கரன் ★ சி. முரளிதரன் ★ என். தர்மராஜா

நிகழ்ச்சி அமைப்பும், தொகுப்பும்: கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரன்

அனுமதி: Agfa படச்சுருள் வெற்றுப்பெட்டி அல்லது
Hayleys Photo Print Ltd ல் படம் எடுத்துக் கொண்ட பற்றுச்சீட்டு

10/C0010



முரசொலிக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

ஈழ வள நாட்டில் வெற்றி முரசு கொட்டட்டும்

# முரசொலி

★ **ராஜ்கோபால்ஸ்**

47, பெரிய கடை - யாழ்ப்பாணம். 23168

★ **மயூரா சென்ரர்**

13. B, நவீன சந்தை - யாழ்ப்பாணம். 23556

★ **கிறவுண்ஸ்**


22.A, நவீன சந்தை - யாழ்ப்பாணம். 22453

★ **ஆர்.ஜி.** சிந்தெட்டிக் டெக்ஸ்டைல்ஸ் இன்டஸ்றி,


ஆர். ஜி. கட்டிடம், யாழ்ப்பாணம்.

(5/C 0005)

# முரசொலி முதல் நாள் வேலைக்




முரசொலி பப்ளிஷர்ஷ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தின் "முதல்" நாள் வேலை நிகழ்ச்சிகள் 10. 11. 1986 திங்கட்கிழமை நடைபெற்றன. பல்துறைப் பிரமுகர்களும் இவ் வைபவங்களில் கலந்து, வாழ்த்திச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந் நிகழ்ச்சிகளின்போது எடுக்கப்பட்ட சில படங்களை இங்கே தொகுத்து தருகின்றோம். (மேலே இடமிருந்துவலம்) பிரம்மஸ்ரீ. சு. பரமேஸ்வரக் குருக்கள் வாஸ்து சாந்தி நவக்கிரக வழிபாடு செய்து பூஜை நடத்துகின்றார். நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அருளுரை வழங்குகின்றார். வடபிரதேச யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. வி. என். சிவ கழக மேலதிக பதிவாளரும் பிரபல எழுத்தாளரும கேற்றுகின்றனர்.




(மேலே - இடமிருந்து வலம்)

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா பிரான்சிஸ் ஜோசப், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவதையும், முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தின் ஆளுநர் நாயகம் நன்றி உரை நிகழ்த்துவதையும் காணலாம்.


(அருகேயுள்ள படங்கள் - மேலிருந்து கீழ்) சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா அவர்கள் வாழ்த்துரை வழங்கிய பின்னர் பிள்ளையார் படமொன்றை திரு. எஸ். வி. முருகேசு முதலாவது விளம்பரத்தை திரு. பூ. ஸ்ரீதர்சிங் முதலாவது விற்பனை ஏஜென்ஸிக் உரிமையாளர் திரு. கே. வி. சற்குணம் பத்திரிகை அச் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செ னத்தை வழங்குவதையும் காணலாம். (கீழே இடமி பகுதியினரையும், அச்சகப்பகுதியில் ஊழியர்கள் கடன



# லக்காட்சிகள்




ன்றூர். வடபிரதேச போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. எஸ். கனகரத்தினம், திரு. வி. என். சிவராஜா, சட்டத்தரணி திரு. பி. கதிரவேலு, யாழ். பல்கலைக் ரபல எழுத்தாளருமான கவிஞர் இ. முருகையன் ஆகியோர் மங்கள விளக்




பார் படமொன்றை ஆளுநர் நாயகத்திடம் வழங்குவதையும், பிரபல வர்த்தகர் வது விளம்பரத்தை வழங்குவதையும், பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ற்பனை ஏஜென்ஸிக்கான கட்டுப்பணத்தைக் கையளிப்பதையும், சிற்றிசன் ணம் பத்திரிகை அச்சுத்தாளை கையளிப்பதையும், முரசொலி, வார முரசொலி ர் திரு. எஸ். திருச்செல்வம் அச்சுக் கோர்ப்பதற்கான முதலாவது விடயதா ாம். (கீழே இடமிருந்து வலம்) வைபவத்துக்கு வந்திருந்தவர்களின் ஒரு ல் ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டிருப்பதையும் காணலாம்.


[படங்கள்: வி. ஆனந்த்]














நாஷனல்
National

ரீ.வி, றேடியோ, வீட்டு மின் உபகரணங்கள்



விற்பனையில் யாழ் மாவட்டத்தில்
முன்னணியில் நிற்பவர்கள்

வீ. கே. ஆர்

V. K. R

அங்கீகாரம் பெற்ற முகவர்

## நீதியை நடுநிலை நின்று புகல்!

ஈழம் பெற்றிட முரச
றைந்து
ஈட்டிய "வெற்றி
முரசு" கொட்டி;
நீளத் தமிழர் 'இதயஒலி'
நீக்கத் தமிழில் செய்தி
தரும்!

புதிய செய்தி இதழ்
வருகை
புவிக்கு நல்ல பலன்
கொடுக்கும்!
புதிய நெஞ்சில் தக்கது
வாய்
பகரும் ஆசிரிய தலையங்
கம்!

சிறுகதை, நாவல், கவி
கட்டுரை
சிந்தும் வண்ணவார
இதழில்;
சிறுவர் இலக்கிய படைப்
புகளும்,
சிற்றிடை மாதர் பகுதி
யதும்;

சோதிடம், வைத்யம்
மகோற்சவமும்
சோர்வதை நீக்கும்
கருத்துக்களால்
நீதியை நடுநிலை நின்று
புகல்
நித்திய செய்திக்கு
"முரசொலியே!"

நவாலியூர் கவிராயர்

## டும்....டும்...டும்!

முரசு முழங்கட்டும்
திக்கெட்டும் ஒலிக்கட்டும்
வீரம் செறியட்டும்
வீணர்கள் ஒழியட்டும்
பெண்மை சிறக்கட்டும்
பேதமை அழியட்டும்
உண்மை உயரட்டும்
ஊக்கம் செறியட்டும்
சாதி ஒழியட்டும்
நீதி நிலைக்கட்டும்

தென்மட்டுவில்
சி. சதாசிவம்

முரசொலிக்கு எமது வாழ்த்துக்கள்

★ வீடியோ படப்பிடிப்பாளர்கள்

★ போட்டோஸ்ரற் செய்பவர்கள் - போட்டோ பிரதிகள்
சிறிதாக்கியோ, பெரிதாக்கியோ (Reduction & Enlargement)
பெற்றுக்கொள்ள இன்று முதல் நாடுங்கள்

17C/0017

சித்ராலயா

யாழ் நகரின் தலை சிறந்த படப்பிடிப்பாளர்கள்
புளொக் தயாரிப்பாளர்கள்

## கருத்தரங்கில் உரை:

# மாணவர் வாழ்வு வளமாக தொழிற்கல்வி அவசியம்

(பண்டத்தரிப்பு)

''உயர் கல்வி மட்டுமே சிறந்த வாழ்வைத் தரும் என நினைப்பது தவறு. படிப்பை முடித்துக்கொண்டு பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர் தொழிற்கல்வித் துறையில் பயிற்சி பெற்று தமது வாழ்வை அர்த்தமுள்ளதாக்கவேண்டும்''.

மேற்கண்டவாறு தேசிய தொழிற் பயிற்சிச் சபைப்பிரதிநிதி திரு. கே. வி. சுப்பிரமணியம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் கருத்தரங்கில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

கல்லூரிஅதிபர்திரு.வே.நாகராசா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில்: உயர் கல்வி கற்கும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைக்கவில்லையென்றால் அதனால் வாழ்வே இருண்டுவிட்டதாக எண்ணத் தேவையில்லை. வாழ்வை வளமாக்க தொழிற் கல்வி துணையாக இருக்கிறது. தொழிற்கல்வி கற்ற எவரும் வறுமையால் வாடியதாக வரலாறு கிடையாது.

பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் தொழில் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு வழங்குகிறது. பயிற்சி பெறுங் காலத்தில் மாதந்தோறும் ஊக்குவிப்பு நிதியாக முன்னூறு ரூபா வழங்கப்படும். பதினறு வயதிற்கும் இருபத்தைந்து வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கும் இவ்வாறு ஊக்குவிப்பு வாய்ப்பு வழங்கப்படுகிறது என்றார்.

ஆசிரியர் எம். கே. பத்மநாதன் நன்றி கூறினர்.

# நகரில் வாழ்ந்துகொண்டே கிராமச் சூழலை சித்தரித்தவர்

## அமரர் கே. டானியலுக்கு எழுத்தாளர் சொக்கன் பாராட்டு

(அரியாலை)

''இப்பொழுது வெளியிடப்படும் எழுத்தாளர் கே. டானியலின் 'என் கதை' வெளியீடு மூன்றுவதாகும். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை, இரசிகமணி கனகசெந்திநாதன் ஆகியோரின் 'என் கதை'கள் ஏற்கனவே வெளியிடப்பட்டு உள்ளன. இரசிகமணி அவர்களின் 'என் கதை' வெளியீடு சுருக்கமானதாக இருந்தாலும் அவரது ஆளுமையை அது புலப்படுத்துகிறது, டானியலின் என் கதையில் அவரின் எழுத்து ஆளுமை பிரதிபலிக்கிறது. மக்களிடம் இருந்து பெற்றதை மக்களுக்கே கொடுத்தவர் டானியல் ஆவர். நகரப்புறத்தில் வாழ்ந்துகொண்டு கிராமப்புறச் சூழ்நிலையை சித்தரித்தவர்.''

இவ்வாறு எழுத்தாளர் திரு. சொக்கன் அமரர் கே. டானியலின் 'என் கதை' வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். இவ்விழா நல்லூர் இந்து விடுதியில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. மௌன அஞ்சலியுடன் ஆரம்பிக்கப்பட்ட விழாவில் பேராசிரியர் தலைமையுரையாற்றுகையில்:

''நாடறிந்த எழுத்தாளராக வாழ்ந்து கே. டானியல் அவர்கள் மறைந்தார். மேலை நாடுகளில் பலர் தங்கள் வரலாறுகளை எழுதிவிட்டு மறைந்துள்ளார்கள். ஈழத்திலும் அவ்விதம் சிலர் எழுதி உள்ளார்கள். டானியல் அவர்கள் ஐம்பத்தெட்டாவது வயதில் இதனை எழுதி உள்ளார். இதன் மூலம் டானியலின் கருத்துக்கள் ஓரளவு வெளிவருகிறது' என்றார்.

திரு. எஸ். திருச்செல்வம் உரையாற்றுகையில்:

''உண்மையை மறைக்காத பண்பு அவரிடம் மேலோங்கி இருந்தது'' என்றார்.

திரு. எஸ். வன்னியகுலம் உரையாற்றுகையில்:

''நல்ல கலைஞன், கவிஞன் என்றுமே இறப்பதில்லை. டானியலும் இறக்கவில்லை, எங்களுடன் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். டானியலைப்பற்றி எதிர்காலத்தில் செய்யும் ஆய்வுகள்தான் இலக்கியத்தில் மிகுந்ததாக்கத்தை ஏற்படுத்தும். டானியல் பட்டம் பெற ஆக்கங்களைப் படைக்கவில்லை. மக்களுக்கு ஏற்றதாக இலக்கியம் படைத்தார்'' என்றார்.

திரு. பொன். பொன்ராசா உரையாற்றுகையில்:

''சாதிப் போராட்டத்தை டானியல் அவர்கள் மக்கள் போராட்டமாக நடத்தியவர். இப்பிரச்சினை இன்றும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை'' என்றார்.

திரு. கே. தங்கவடிவேல் உரையாற்றுகையில்;

''நிதர்சனமான தரிசனங்களுக்கு ஊடாகத் தன் கதைகளை ஆக்கியவர் டானியல் ஆவர். உண்மை அநுபவத்திற்கு வெளியே நின்று டானிடல் இலக்கியம் படைக்கவில்லை''என்றார்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் உரையாற்றுகையில்;

''பேச்சு மொழியை நாவல்களில் அதிகம் கலந்து எழுதியவர். டானியல் மனித நேயங் கொண்ட படைப்பாளராவர்''என்றார்.

ஜனப். எம். ஏ. சி. இக்பால் உரையாற்றுகையில்;

''டானியலின் 'என் கதை' எழுத்தாளர்களுக்குரிய அறிவு நூல் ஆகும்'' என்றார்.

திரு. வே. சித்திவிநாயகர் உரையாற்றுகையில்:

''எழுத்தாளர் மட்டுமல்ல நல்ல பொறியியல் வல்லுனரும் ஆவர்'' என்றார்.

முதற் பிரதியை எஸ்ரி மார்க் பெற்றார். பதிப்பாசிரியர் திரு. வி. ரி. இளங்கோவன் நன்றியுரை ஆற்றினர்.

# யாழ். வைத்திய அதிகாரிக்கு அமைச்சர் உறுதிமொழி

யாழ். வைத்தியசாலையின் பாதுகாப்புக்கும் நோயாளர்கள் பராமரிப்பு தொடர்ந்து நடைபெறுவதற்கும் தான் தன்னுலியன்ற உதவிகளைச் செய்வதாக மகளிர் போதனு வைத்தியசாலைகள் அமைச்சர் திருமதி சுனேத்ரா ரணசிங்க யாழ்.போதனு வைத்தியசாலை அதிகாரி டாக்டர். சி. எஸ். நச்சினர்க்கினியருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் உறுதியளித்துள்ளார்.

நெருக்கடியான காலத்திலும் வைத்தியசாலையை திறம்பட இயங்கவைத்துக்கொண்டிருக்கும் தங்களுக்கும் தங்கள் ஊழியர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## வீதிகளின் அவல நிலை

(பண்டத்தரிப்பு)

தொட்டிலடி - பண்டத்தரிப்பு, விளாவெளி - கீரிமலை வீதிகள் பாவிக்க முடியாத நிலையில் குண்டும் குழியுமாக காணப்படுகின்றன. மழை காலங்களில் இவற்றில் நீர் தேங்கி வெள்ளக் காடாக இருப்பதால், வாகனங்கள் செல்லமுடியாதுள்ளது.

பல காலமாக திருத்தப்படாதுள்ள இவ் வீதிகளை சம்பந்தப்பட்டவர்களிடம் திருத்துமாறு பல தடவைகள் கோரப்பட்டும் எதுவித பலனும் இல்லை என பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## இளைப்பாறினர்

(வட்டுக்கோட்டை)

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வைத்தியசாலையில் அதிபராகக் கடமையாற்றிய திரு. க. வேலாயுதபிள்ளை அவர்களும் இதே பாடசாலையில் கடந்த முப்பத்தெட்டு ஆண்டுகளாக ஆசிரியராகப் பணிபுரிந்த திருமதி வே. இலட்சுமியார் அவர்களும் இம் மாதத்துடன் சேவையிலிருந்து இளைப்பாறுகின்றனர். இவர்களின் சேவையைப் பாராட்டி மேற்படி பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் பிரிவுபசார விழா ஒன்றை நடாத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

## மீன்வாடி தீக்கிரை

(குருநகர்)

பூநகரி பாலாவியில் வாடி அமைத்து தொழில் செய்து வந்த குருநகர் மீனவர் யோசப் வின்சன் என்பவரின் மீன்வாடி இனம் தெரியாத சிலரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இளைஞர்குழுவொன்று விசாரணை நடத்தி வருகின்றது.

இவ்வாடியில் தங்கி வரும் மீனவர்களின் உபகரணங்கள் வலைகள் உட்பட நாற்பதினுயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் இச்சம்பவத்தினுல் எரிந்து சாம்பராகின.

தமிழர் வாழும் இடமெல்லாம்
முரசொலி முழக்கம் கேட்கட்டும்

VANITHA
SALES
DISTRIBUTORS

வனிதா சேல்ஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ்
19, Jubilee Bazzar, Jaffna
☎ 22069

மொத்த புடவை விற்பனையாளர்

★

சகல மங்கள் வைப்வங்களுக்கும் வாகன
வசதி செய்து கொடுக்கப்படும்

19, ஜுபிலி பசார், யாழ்ப்பாணம். ☎ 22069

★

அதிர்ஷ்ட லாபச் சீட்டின்
மொத்த விற்பனையாளர்

19, ஜுபிலி பசார், யாழ்ப்பாணம் ☎ 22069

6/0000

## கல்வி அதிகாரி உரை:

# நல்லொழுக்கத்தின் வெளிப்பாடே சமூகவாழ்வின் அழகுணர்வாகும்

''ஒழுக்கம் சமூக வாழ்வின் அழகுணர்வை வெளிப்படுத்துகிறது. மாணவர்களுக்கு இந்த சமூக உணர்வு அவசியம் வேண்டப்படுவதால் வற்புறுத்தல் இல்லாத ஒழுக்கம் பேணப்பட வேண்டும். அப்பொழுது தான் தமிழர் பண்பாடு காப்பாற்றப்படும்.''

யாழ். ஆனைக்கோட்டை உயரப்புலம் றோ. க. த. க. பாடசாலை புதிய கட்டிடத் திறப்புவிழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்டப்பதில் கல்வி அதிகாரி திரு. சோமசுந்தரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திருமதி பாக்கியம் கந்தசாமி தலைமையில் நடைபெற்ற அவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

''வாழ்வுக்கு உடல் எந்தளவுக்கு முக்கியமானதோ அந்தளவுக்கு பிள்ளைகள் பயிலும் பாடசாலைகளின் முக்கியத்துவமும் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

பாடசாலைகளின் வளர்ச்சி நிலைகளுக்கேற்ப மாணவர்களின் வரவும் அதிகரித்துக் கொண்டே செல்வதால் தேவைகளும் கூடிக்கொண்டே போகின்றன. அந்தத் தேவைகளை சொந்தக்காலில் நின்றே பூர்த்தி செய்யக் கூடியதாக பெற்றோர் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்'' என்றார்.

வண.பிதா இம்மனுவல் அடிகளார், மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன், திரு. எம். பேரின்பநாயகம் இளைப்பாறிய ஆசிரியர்கள் திரு. சுணபதிப்பிள்ளை, திரு. நீக்கிலாப்பிள்ளை ஆகியோரும் பேசினர். திருமதி சோமசுந்தரம் பரிசில் வழங்கினர். கலை நிகழ்ச்சிகளை அடுத்து திரு. குணரத்தினத்தின் நன்றியுரை இடம் பெற்றது.

— பொன். பொன்ராசா

## சுருக்கெழுத்து பயிற்சிநெறி

(வல்வெட்டித்துறை)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், ஆங்கில சுருக்கெழுத்துப் போதிப்பவர்களின் அறிவை மேலும் விருத்தி செய்யும் நோக்குடனும், புதிய ஆங்கில சுருக்கெழுத்துப் போதனசிரியர்களை உருவாக்கும் நோக்குடனும், அல்வாயில் ஆங்கில சுருக்கெழுத்து ஆசிரிய பயிற்சி நெறி ஒன்றை இலவசமாக ஆரம்பித்துள்ளது.

வெற்றிமுரசு கொட்டி வரும் முரசொலிக்கு எமது வாழ்த்துக்கள்!

# வீடியோ விஷொன்ஸ்

353C, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

ஒளிப்பதிவாளர்: திரு. சி. இராஜராஜன் அவர்களின்

★ கலை நுணுக்க கை வண்ணத் திறமையில் உங்கள் சகல மங்கள வைபவங்களையும் வீடியோ வர்ணப் படமாக ஒளிப்பதிவு செய்து கொள்ளுங்கள்

★ பாதுகாப்பான சூழலில் எமது அலுவலகம் இயங்குகிறது.

353C, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்தியிலிருந்து 10 மீற்றர் தூரம் பெருமாள் கோயில் பக்கம் வாருங்கள், ஜெயா வைண்டிங் வேக்ஸ் முன்னால் எமது அலுவலகத்தைக் காண்பீர்கள்)

8/C0008

கல்விப் பணிப்பாளர் பாராட்டு:

## வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்களின்பணி காலம் அறிந்தது

(அச்சுவேலி)

எவ்விதத்திலும் தன்னல மற்ற ஒரு புனித சேவையே ஆசிரிய சேவையாகும். இப் பாடசாலையில் இப்புனித சேவையினை உணர்வு பூர்வமாக ஆற்றும் பல ஆசிரியர்கள் இருப்பதுகண்டு நான் மகிழ்வுறுகின்றேன்.

மாடிக்கட்டடங்களுடனும் பூஞ்சோலைகள் மத்தியிலும், பல்வேறு வசதிகளுடனும் தமது ஆசிரியப் பணியினை மேற்கொண்டிருந்த ஆசிரியர்கள் பலர் இப்பொழுது அப் பாடசாலையின் வகுப்புக்களை சிறுபாடசாலையிலும், கொட்டகைகளிலும், விருந்தைகளிலும், கோவில்களிலும், மடங்களிலும் ஏன் மரங்களின்கீழும் கூட நடத்துகின்ற புனிதத் தொண்டு எம்மினத்தவருக்கான காலமறிந்த தொண்டாகும்''.

இவ்வாறு இராணுவமுகாம் அமைக்கப்பட்டதால் இடம் பெயர்ந்து ஆவக்கடவை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தற்காலிகமாக இயங்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கு பாடசாலையின் அபிவிருத்திச் சபையினாலும், பழைய மாணவர் சங்கத்தாலும் அமைக்கப்படவுள்ள 30 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த தற்காலிக கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிவைத்து உரையாற்றிய யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இருக்கும் சொத்துக்களில் தமது பங்கினைப் பெற்றதும் பெற்றுரை விட்டு விலகிவிடும் தமது பிள்ளைகளிலும் பார்க்க எங்குகண்டாலும் மதிப்பளிக்கும் நன்மாணுக்கரின் புன்முறுவல் ஒன்றே ஆசிரியனுக்கான ஆத்மதிருப்தியாகின்றது.

அந்நிலைக்கு மாணவனை உருவாக்குவது நல்லாசிரியனின் கடமை என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்- என்றூர்.

விழாவுக்கு தலைமை வகித்த பாடசாலை அதிபர் திரு.எஸ். கணேசபிள்ளை உரையாற்றுகையில்,

''எமதுபாடசாலையிலக றபிக்கும் பதினெரு ஆசிரியர்கள் இராணுவ முகாமினுல் தமது வீடுகள் சொத்துக்கள் அத்தனையும் இழந்த நிலையில் தமது தொடர்ச்சியானசேவையினுல் இவ்வருட க. பொ. த உயர்தரப் பரீட்சையில் பெருமையினைப் பாடசாலைக்குத் தேடித் தந்துள்ளனர்.

மீனயியலில் 100% சித்தியினையும், பொதுவாக 15பேர் பல்கலைக்கழகம் புகும் தகுதியினையும் பெற இவ் ஆசிரியர்களே காரண கர்த்தாக்களாயினர். அவர்களை வயாவிளான் மகா வித்தியாலயம் என்றும் மறக்காது'' என்றூர்.

வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா புன்னலைக்கட்டுவன் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. திருநாவுக்கரசு ஆகியோருட்பட பலர் உரையாற்றினர்.

### கொக்குவில் இந்து அதிபர் உரை:

## ஆசிரிய சூழல் அமைவிலே மாணவர்கள் பழு நீங்கும்

''ஏறத்தாழ ஒன்றரைஇலட்சம் ஆசிரியர்களைக் கொண்ட அமைப்பில், ஆசிரியர்களை நெறிப்படுத்தி, ஊக்கமளித்து ஏற்ற சூழலை, வருவித்து கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டிய கடப்பாட்டினை உருவாக்கினுல் எமது இளம் சமுதாயத்தின் மீது சுமத்தப் பட்டுள்ள பழுவின் பெரும் பகுதி அகன்றுவிடும்''

இவ்வாறு கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

''சூழல் நிறைவு பெறின் கல்வித் தாகத்தால் தவிக்கும் மாணவனுக்குப் பாடசாலை எனும் தடாகத்தில் போதிய நீர் கிடைக்கும். ரியூசன் எனும் கானல் நீரால் அலைக்கழிக்கப் பட்டு அல்லற்பட்டு மாய வேண்டிய அவலம் நீங்கும்.

### பிரபாகரன்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கிறது பிரபாகரன் அமைப்பு. ஆகவே இவர்களால் மக்கள் அமைதிக்குக் குந்தகம் எதுவும் ஏற்பட்ட நிகழ்ச்சியே நடந்தது கிடையாது.

அவமானம்!

தாங்கள் கைது செய்யப் பட்டதையும் காவலில் வைக்கப்பட்டிருப்பதையும் கூட போராளிகளின் தலைவர்கள் பெரிதாக நினைக்கவில்லை. பொலிஸ் நிலையத்தில் நடத்தப்பட்ட விதம் அவர்களுக்கு அதிர்ச்சி அளித்தது. ''நேராக ஐ. ஜி. அலுவலகத்துக்கு எங்களை அழைத்துச் சென்றிருக்கலாம். உள்ளூர் காவல் நிலையத்தில் ரௌடிகளை ஆஜர் படுத்துவதுபோல எங்களை அழைத்துச் சென்றிருக்க வேண்டுமா?'' என்று மனம் வருந்தினுர் ஒரு போராளித் தலைவர். அத்தனை பேருடைய புகைப்படங்களும் பொலிஸிடம் ஏற்கனவே இருக்க இவர்களை எதற்கு அங்கே ஒரு முறை படம் எடுத்தார்கள் என்பதும் ஒரு கேள்விக்குறி! பிரபாகரனை பல போஸ்களில் படம் எடுத்தார்கள்! எதற்கு என்று தெரியாமல் அவர் ஆச்சரியப்படுகின்றுர்.

ஒரு காலத்தில் பிரபாகரன் எப்படி இருப்பார் என்று தெரியாமல் சங்கடப்பட்டதுண்டு இலங்கை அரசு. பிரபாகரன் புகைப்படத்தை கவலைப்படாமல் முதலில் இலங்கை அரசுக்குக் கொடுத்து உதவியது என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே தமிழக பொலீஸ் மீது சொல்லப் படுவது உண்டு.

(மிகுதி நாளை)

### மக்கள் மனக்குறை

(காரைநகர்)

காரைநகர் மேற்கு வீதியால் சுடந்த பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த இ. போ. ச. பஸ் சேவை இடையில் நின்று போனதால் இப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களுக்கு உட்பட்டுள்ளனர்.

காரைநகர் தபாலகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட மூன்று மதகுவேலைகள் காரணமாகவே இந்தசேவை இடை நிறுத்தப்பட்டிருந்தது.

மதகுவேலைகள் பூர்த்தியாகி இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இ. போ. ச. இன்னும் தனது சேவையை ஆரம்பிக்காதிருப்பது ஏன் என்று இப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகிறுர்கள்.

முரசொலிக்கு எமது இனிய வாழ்த்துக்கள்

# MAYFAIR ACADEMY

# மேபெயர் அகடமி

புதிய வகுப்புகள்

★ CAKE ICING ★ PAINTING
★ COOKERY ★ KNITTING
★ DRESS MAKING ★ HAIR STYLES

6 மாத வகுப்புகளும், இல்லத்தரசிகளின் வசதியை முன்னிட்டு மாலை நேர வகுப்புகளும் நடைபெறும்.

★ GUITAR ★ TYPING (தமிழ், ஆங்கிலம்)
★ VIOLIN ★ SHORT HAND
★ VEENA ★ SPOKEN ENGLISH
★ DRUMS CLASS

★ பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் தேவையான நவீன ஆடைகள் யாவும் தைத்துக் கொடுக்கப்படுகின்றது.

★ விண்ணப்பங்கள், பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள் போன்றவை (TYPE) செய்து கொடுக்கப்படுகின்றது.

★ திருமணம், பிறந்தநாள் மற்றும் சகல கொண்டாட்டங்களுக்குமுரிய கேக் வகைகள் தங்களுடைய பணிப்பிற்கமையச் செய்து கொடுக்கப்படுகின்றது,

★ 6-ம் வகுப்புக்குக்கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கு மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

108, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

11/C0011

முரசொலிக்க வந்துதித்த முரசொலிக்கு எமது வாழ்த்துக்கள்!

அண்ணா கோப்பி
அண்ணா தேயிலை
அண்ணா பத்தி
அண்ணா பற்பொடி

மக்கள் அனைவரும் ஆவலுடன் வாங்குவது அண்ணா தயாரிப்புகளே!



உங்கள் அன்றாட பாவனையில் அண்ணா தயாரிப்புகளின் வெற்றுப் பக்கட்டுகளை சேகரியுங்கள்!

1987 ஆம் வருட வர்ண கலண்டர்கள் உங்களை மகிழ்விக்கக் காத்திருக்கிறது.

(12/C0012)

# இலங்கைப் பிரச்சினை:

# ரஷ்யத்தரப்புக்கு இந்தியா விளக்கம்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் தான் மேற்கொண்டு வரும் துணை நடவடிக்கைகள்பற்றித் தற்போது புதுடில்லி வந்துள்ள சோவியத் ஜனாதிபதி திரு. பிஹாயில் கோர்பசெவ்விடம் இந்தியா விரிவாக விளக்கியுள்ளது.

தாம் அண்மையில் கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தைகள் பெறுபேறு விவரம் குறித்து சோவியத் ஜனாதிபதியுடன் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்திய வேளையில் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. நட்வால்சிங் விளக்கியதாகத் தெரியவருகிறது.

அண்மைக் காலங்களில் இலங்கை இனப்பிரச்சினை குறித்து ரஷ்யா எதுவித கருத்தையும் வெளியிடாமல் மௌனஞ் சாதித்து வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சட்டமன்ற உறுப்பினர் பதவி நீக்கம்:

### சேலம் மாநாடு பலத்த கண்டனம்!

(சென்னை)

அரசியல் சட்டப் பிரதிகளை எரித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஏழு திராவிட முன்னேற்றக் கழகச் சட்டசபை உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டது சட்ட நடைமுறைக்கு எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல என நேற்று சேலத்தில் நடைபெற்ற தி. மு. கழக மகாநாட்டில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஹிந்தி திணிப்பை எதிர்த்து தொடர்ந்து போராடுவதென்றும் இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இதே வேளையில், ஏழு தி. மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்களை சபாநாயகர் பாண்டியன் பதவி நீக்கம் செய்த தன் அரசியல் சட்டரீதியான விளைவுகள் பற்றி தான் விஷயமறிந்த வட்டாரங்களுடன் சட்ட ஆலோசனை நடாத்தி வருவதாகவும், ஒரு பட்சபாதமற்ற பரிசீலனையின் பின்னரே இவ்விவகாரம் பற்றி தாம் இறுதி முடிவு எடுக்கவுள்ளதாகவும் தமிழக ஆளுநர் குரானா நேற்று சென்னையில் தெரிவித்தார்.

## ● அமானுல்ஹானை பிரிட்டனிலிருந்து நாடு கடத்த உத்தரவு!

(லண்டன்)

ஜம்மு - காஷ்மீர் எல்லைப்புற இணைப்பியக்கத்தின் தலைவர்களில் ஒருவரான திரு. அமானுல்ஹான் நாடு கடத்தப்பட வேண்டும் என பிரிட்டிஷ் உள்துறை அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய ஒருவராய் இருந்துவரும் திரு. அமானுல்ஹான் அடுத்த ஏழு நாட்களினுள் பிரிட்டனிலிருந்து வெளியேறிவிடவேண்டும் என மேற்படி உத்தரவு கூறுகிறது.

திரு. அமானுல்ஹானை நாடு கடத்துவதற்கான காரணங்கள் எதுவும் விபரபூர்வமாய் வெளியிடப்படவில்லை.

## 'இந்து' அரசியல் விமர்சகர் ஜி.கே.ரெட்டிக்குபுகழ்விருது

(சென்னை)

பிரபல இந்திய நாளேடான 'இந்து'வின் அரசியல் விமர்சகர் திரு. ஜி. கே. ரெட்டிக்கு 1981க்கான ராஜலக்ஷ்மி விருது வழங்கப்பட்டுள்ளது.

1979 முதல் ராஜா லக்ஷ்மி நிலையத்தால் ஆண்டு தோறும் கலை, இலக்கிய விஞ்ஞான மற்றும் அறிவுத்துறைகளில் சிறப்புப்பணியாற்றியோருக்கு இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ரெட்டிக்கு விருது வழங்கும் வைபவத்துக்குத் தலைமை தாங்கிய முன்னாள் யூனியன் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணிம் தமதுரையில் கூறியதாவது;

''தேசிய புதினப் பத்திரிகை உலகில் பெருமைக்குரிய இடத்தைச் சம்பாதித்துக் கொண்ட 'இந்து' சிறந்த பல பத்திரிகையாளர்களை உருவாக்கித் தந்துள்ளது. அதில் திரு. ரெட்டியும் ஒருவர். அவரது அரசியல் விமர்சனக் கட்டுரைகள் வாசகர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுபவை. இன்று வடக்கு வரை சென்றுவிட்ட 'இந்து'வின் வளர்ச்சியில் திரு. ரெட்டி ஆற்றிய, ஆற்ற வேண்டிய பாத்திரம் மிகப்பாரியது.''

விருது பெறும் திரு. ரெட்டி இருவாரகால அமெரிக்கப் பயணத்தை மேற்கொள்ளும் வாய்ப்பினையும் பெறுகிறார்.

## பிரிட்டிஷ் வங்கி வெளியேறுகிறது!

(லண்டன்)

பிரிட்டனின் நான்கு மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றான பார்க்லேய்ஸ் தென்னாபிரிக்காவில் தனது இயக்கத்தை நிறுத்திவிட்டு அங்கிருந்து வெளியேற முடிவு செய்துள்ளது.

இது தென்னாபிரிக்காவுக்கு மேலுமொரு பொருளாதார ரீதியான அடியாகும். பார்க்லேய்ஸ் தீர்மானத்தை பிரிட்டிஷ் இன ஒதுக்கல் - எதிர்ப்பு இயக்கம் 'மிகப்பெரிய வெற்றி' எனப் பாராட்டியுள்ளது.

தென் ஆபிரிக்காவிலிருந்து தாம் செய்த முதலீடுகளை எல்லா பிரிட்டிஷ் கம்பனிகளும் வாபஸ் பெறவேண்டும் என இவ்வியக்கம் நீண்டகாலமாகவே கோரி வந்தது.

★ முரசொலிக்கு ★
எமது இனிய வாழ்த்துக்கள்
★ ★ ★
மாணவர்களின்
பாதுகாப்புக் கருதி
எமது சகல வகுப்புகளும்
G. C. E. A/L
விஞ்ஞானம்
வர்த்தகம்
கலை
G. C. E. O/L
தரம் 9
TYPING, SHORT HAND
SPOKEN ENGLISH
★ ★ ★
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற இடத்தில்
நடாத்தப்படுகின்றன.
★ ★ ★
BOND
INSTITUTION
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
7/C0007

ஈழமக்களின் இதய நாதமாய்
முரசொலி
என்றும் ஒலித்திட வாழ்த்துகிறோம்.
இ. க. தியாகராசா
எலெக்றிக் லைன்ஸ்
ELECTRIC LINES
எவர்சில்வர் பாத்திரங்களுக்கும் பரிசுப் பொருட்களுக்கும்
யாழ்நகரில் தலைசிறந்த விற்பனைக் கூடம்
120, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23376

பத்திரிகை உலகிற்கு முன்னோடியாக விளங்கும் முரசொலிக்கு
★ எமது இதய நல்வாழ்த்துக்கள் ★
கஸ்தூரியார் வீதியில் அலங்கார விற்பனை களஞ்சியம்
★ மயூரி ட்றேட் சென்ரர் ★
131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நங்கையரின் நவநாகரிக தெரிவுகள் எம்மால் அறிமுகமாகின்றன!
வர்ண ஜாலங்களில் பூச்சாடிகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
9/C0009

28-11-1986 வெள்ளிக்கிழமை

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI

# உண்ணாவிரதத்தை உடனே கைவிடுங்கள்!

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கேட்கிறது

"அபாயகரமான கட்டத்தை நெருங்கியுள்ள உண்ணாவிரதிகளின் நிலையைக் கருத்திற் கொண்டு பல்கலைக்கழகம் தொடர்பாக எழக்கூடிய சிக்கல்களைக் கவனத்தில் எடுத்தும் சர்வதேச, பிரதேச மட்டங்களில் தற்போது தோன்றியுள்ள நிலைமைகளின் யதார்த்தத்தை கணக்கில் எடுத்தும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் உடனடியாக கைவிடப்பட வேண்டும்."

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டுவரும் உண்ணாவிரதம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை குறிப்பிட்ட இயக்கத்தின் பிராந்தியத் தலைமைப்பீடத்துடன் ஆசிரியர் நடவடிக்கைக் குழு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தியது. இதன் காரணமாகப் பின் வரும் கருத்துகள் பெறப்பட்டன.

பல்கலைக்கழகத்தில் நடந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட சகலரினதும் பாதுகாப்புக்கு குறிப்பிட்ட இயக்கம் வழங்கிய உறுதி மொழியின் அடிப்படையில் ஆசிரியர் சங்கம் உத்தரவாதம் அளித்தது,

கேசவன் தொடர்பாக வைத்தியபீட மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று எமக்குக் கூறப்பட்ட விளக்கம் எழுத்துருவில் பல்கலைக்கழக நிர்வாகத்திற்குக் கொடுக்கப்படும். வேண்டுமாயின் அதன் பிரதி மாணவர் அமைப்புக் குழுவிடம் கொடுக்கப்படலாம்

பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வெளியே கைது செய்யப்பட்டால் அது பற்றி கூடிய விரைவில் பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு அறிவிக்கப்படும்.

பல்கலைக்கழக வளவிற்குள் முன்வைக்கப்படும் சித்தாந்த ரீதியான எந்தக் கருத்துக்காகவும் பல்கலைக்கழக மாணவரெவருக்கும் எதிராக வெளியே நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்கள் மூலம் மாணவரது கருத்துக்கள், விமர்சனங்கள் வெளியிடவும் பிரசுரிக்கவும் படும்.

மாணவரது வேண்டுகோளுக்காக மாத்திரமன்றி தம் மீது சுமத்தப்பட்ட தப்பபிப்பிராயத்தை நீக்குவதற்காக வேணும் விஜிதரனை தேடுவதில் முழுமூச்சாக ஈடுபடுவர் என்பதனை அவர்கள் மீண்டும் ஊர்ஜிதப்படுத்தினர். அத்துடன் அவரைத் தேடுவோருக்கு ஆதரவு வழங்குவதுடன் மாணவர் அமைப்புக் குழுவும் அக்கறையுள்ள ஏனையோரும் வழங்கும் தகவல்களின் உதவியுடனும் துரிதமாக தேடுதலில் ஈடுபடுவர். அவ்வப்போது தேடுதலின் பெறுபேறுகள் ஆசிரியர் சங்கத்திற்கு அறிவிக்கப்படும்.

பாதுகாப்புக் காரணமாக

## வல்லை நெசவாலை மூடப்பட்டு உபகரணங்கள் இடமாற்றம்

[வல்வெட்டித்துறை]

வல்லை நெசவு ஆலை மூடப்பட்டது. மின்தறிகள், யந்திரங்கள், மற்றும் உபகரணங்கள் யாவும் அங்கிருந்து பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பகுதி மக்களின் நன்மையைக் கருத்திற் கொண்டே முன்னேற்பாடாக நெசவாலை உபகரணங்கள் அப்புறப்படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

வல்லை நெசவு ஆலை பாதுகாப்பான இடத்தில் பருத்தித்துறைப் பகுதியில் அமைக்கப்படலாம் எனவும் மேலும் தெரியவருகிறது.

## கூட்டமாக நிற்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

தமிழ்ப்பிரதேசங்களில் பெரும் தாக்குதல்களை நடாத்த அரசு திட்டமிடுவதினால் இராணுவ முகாம்களுக்கு அண்டிய பகுதிகளில் நடமாடுதல், கும்பலாக நின்று வேடிக்கை பார்த்தல், கதைத்தல் என்பவற்றைத் தவிர்த்து பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி அவசர மருத்துவ சேவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஒவ்வொருவரும் வெளியே நடமாடும்போதும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய குறிப்புக்களை தம்வசம் வைத்திருக்க வேண்டுமெனவும், இருபத்திநான்கு மணி நேரமும் யாழ்நகரத்திற்குள் தமது அம்புலன்ஸ் வண்டி சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவசர மருத்துவ சேவை தெரிவித்துள்ளது.

### பாலைதீவு...

—1ஆம் பக்கத் தொடர்ச்சி

இருவாரங்களுக்கு முன்பாக இப்பகுதியில் நங்கூரமிட்டு நின்ற கடற்படை கப்பல் அதிகாரி பகல் முழுதும் தொழில் செய்து மாலை ஐந்து மணிக்கு முன்பாக திரும்பி விட வேண்டும் என்ற நிபந்தனையுடன் கடற்றொழிலாளர்களை தொழில் செய்ய அனுமதித்திருந்ததாகவும், பின்பு தற்சமயம் வந்துள்ள அதிகாரி கடலில் தொழிலாளர்களது படகுகளைக் கண்டால் சுட்டுத் தள்ளப்படுமென்று எச்சரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக குருநகர், கொழும்புத்துறை, பாஷையூர், கல்முனை, பள்ளிக்குடா, பாலாவி பகுதி மீனவர்கள் பட்டினிச் சாவுகளை எதிர் நோக்கியுள்ளனரென்றும்தெரிவிக்கப் படுகிறது.

### சீனிக்கப்பல் வருகிறது

யாழ். மாவட்டத்திற்கென ஆயிரம் தொன் சீனியை ஏற்றிக்கொண்டு 'மதுரட்ட' என்ற கப்பல் இன்று காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வரவுள்ளது. யாழ். மாவட்டத்திற்கு தேவையான உணவுப் பொருட்கள் போதியளவில் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம் தெரிவித்தார்.

### ஓமந்தையில்....

—1ஆம் பக்கத் தொடர்

பாணம் பிரதான பாதை போக்குவரத்துகள் தடைப்பட்டன.

### 99 தமிழ்.....

—1 ஆம் பக்கத் தொடர்ச்சி

காகி காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

மன்னார் அடம்பன் பகுதிகளில் அண்மையில்இடம்பெற்ற இராணுவ அனர்த்தங்கள் காரணமாக இந்த அகதிகள் இந்தியாவுக்கு தப்பிச் செல்லும் போதே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை கைது செய்தமை பற்றி இவர்களின் உறவினர்களுக்கு எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது. இதேவேளை இந்த அகதிகளுக்கு வழங்கப்படும் உணவுப்பொருட்களும் போதாமையால், புத்தளம் பகுதி முஸ்லிம்கள் இவர்களுக்கு உணவுப்பொருட்களை கொடுத்துதவுகின்றனர்.

### நெடுந்தீவில்...

—1ஆம் பக்கத் தொடர்ச்சி

டியைச் சேர்ந்த பரிபூரணன் முருகானந்தன் (22) அவரது சகோதரியான திருமதி ஆனந்ததேவி உதயகுமார் (24), அவரது கணவன் உதயகுமார் (26) ஆகியோரே நேற்று முன்தினம் இரவு விடுதலை செய்யப்பட்டவர்களாவர். இவர்களில் திருமதி வசந்தி கர்ப்பிணி என்பது குறிப்பிடத்தக்கது. முருகானந்தன் இரண்டு கால்களும் ஒரு கையும் இல்லாதவர்.

ஏனைய இருபத்து மூன்று பேரும் தொடர்ந்தும் முகாமில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் இராணுவத்தின் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாவதாகவும், ஒருவர் படையினர் துப்பாக்கியால் அடித்ததில் பலத்த காயத்திற்குள்ளாகி தலையில் தையல் போடப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. இளைஞரொருவருக்கு கைக் முறிக்கப்பட்டதாகவும், மற்றொருவர் நடக்க முடியாத நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### மாணவன் உடல் நிலை பாதிப்பு

யாழ். பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணாமற் போயுள்ளது தொடர்பாக கடந்த ஒன்பது நாட்களாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் ஆறு பேரில் ஒருவரான ஆர். குகதாஸன் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

### சுமுக முடிவிற்கு தீவிர முயற்சி

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் பல்வேறு வெகுஜன அமைப்புக்களும் நேற்று முழுவதும் ஈடுபட்டன.

இவ் அமைப்புக்கள் மாணவர் அமைப்புக் குழுவுடன் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றபோதிலும் நேற்று இரவு வரையில் முடிவெதுவும் காணப்படவில்லை.




அலைதாவித் தூது சென்றார் ஆஞ்சநேயர் அன்று!
அலை ஏறிச் சேதி சொல்லும் ரெலிகுளோப் இன்று!!


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62/1ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 28.11.1986ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.